# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.01/2024

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.04 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | பிரிண்டிங் பிரஸ் |
| பெயர் | - | பாலன் (எ) ப்ரஸ் பாலன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | ராஜீவ்காந்தி நகர் | வயது | - | 39/2026 |
| சாதி | - | | | | |

<u>24-03-2026</u>

**( 1-ம் எதிரி இறப்பின் காரணமாக அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 2 எதிரி ஆஜரில்லை)**

(2-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பிரஸ் நடத்தி வருகிறேன். அ.சா.1 வெற்றிவேல் என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 07.01.2024-ம் தேதி காலை 10.15 மணியளவில் வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண்.04/2024 வழக்கு தொடர்பாக சம்பவயிடமான மாணிக்க NC புகார்தாரர் வீட்டின் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டுக்கொண்டிருந்த போது நானும், முருகவேல் என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், முருகவேல் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.